بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON ~ 01/08/2014

**வெள்ளிக்கிழமை குத்து.்.பா 01/08/2014**

# SIGN OF THE LAST DAYS

# இறுதி கால அடையாளங்கள்

HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

உலக மக்களுக்கு சலாம் கூறிய பிறகு ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்கள் தஷஹ்ஹுதும் தஅவ்வுசும் சூரா பாத்திஹாவும் ஓதி இவ்வாறு கூறினார்.

**''நீங்கள் வேதனைகளை பயந்து கொள்ளுங்கள் அது உங்களில் அநியயாம் செய்தவர்களை மட்டும் தான் குறிப்பாகப் படிக்கும் என்பதில்லை. நிச்சயமாக அல்லாஹ் தண்டனை அளிப்பதில் கடுமையானவன் என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள்'' (8-26)**

புனித குர் ஆன் கூறியிருப்பது போன்று, மனிதன் புரிந்துக் கொள்ள வேண்டிய ஒரு விஷயம் பிறப்பு இருந்தால் கண்டிப்பாக இறப்பும் இருக்கும். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறிகின்றான்.

**''ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தைச் சுவைப்பதாகவே இருக்கிறது. நன்மை கொண்டும் தீமைக் கொண்டும் நாம் உங்களை சோதிக்கிறோம். பின்னர் நம்மிடமே நீங்கள் மீட்கப்படுவிர்கள்'' (21.36)**

அநஸ் (ரலீ) அவர்கள் ரிப்போர்டு செய்துள்ள ஒரு நபி மொழியில் இவ்வாறு காணலாம்.

**''மத விஷயங்களை கடைபிடிப்பது தங்களின் கைகளில் நெருப்பு கட்டையினை எடுத்துக் கொள்வதற்கு சமமான ஒரு காலம் வரும்'' (திர்மிதி)**

பெருபான்மை மக்கள் மத விஷயங்களை கடைப்பிடிப்பது, ஒரு பாரமாக எண்ணுகின்ற ஒரு காலம் வரும் என மேல் கூறிய ஹதீஸ் வாழியாக தெளிவாகிறது. நெருப்பு கட்டைகள் தங்களின் கைகளில் எடுத்தது கொள்வது வருத்தத்திற்கு ஆளாக்கி கொள்வது போன்றே மத விஷயங்களை கடைப்பிடிப்பதனையும் மிக வருதத்திற்குரிய விஷயமாக அவர்கள் எண்ணுவார்கள். நமது அன்பு குரிய தூதுவ அரசன் (ஸல்) தனது உம்மத்திற்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இறுதி நாளுக்கு முன் ஏராளமான ''பித்தினாக்கள்'' எழும்பி விடும். அது சில வேளை அந்தகாரம் போன்றிருக்கும். அதில் இருந்து உண்மை நம்பிக்கையாளர்களுக்கு வெளியேற எவ்வாழியும் கிடைக்காது. அந்த ''பித்தினாக்கள்'' அச்சமுடையதும் அபாயம் நிறைந்ததுமாகயிருக்கும். ஏராளமான நம்பிக்கையாளர்களுக்கு தங்களின் நம்பிக்கை இழந்து விடும். பெரும்பான்மை நம்பிக்கையாளர்களும் மத விஷயங்களை கடைப்பிடிப்பதில் இருந்து பின்னோக்கமடைந்திருப்பார்கள். சிலரில் விடியற்காலையில் ''ஈமான்'' இருக்கும் ஆனால் அக்கிரமிகளின் அதிகார சக்தியால் அல்லது உண்மையினை நிராகரிப்பவர்களின் ஈர்ப்புக்கு அடிமைப்பட்டு மாலையில் அவர்களின் ஈமான் இழந்து விடும். காரணம் அவர்களை நம்பிக்கையில் பலனற்றவர்கள் ஆவார்கள். இஸ்லாமின் பாதையில் உறுதியாக நிலை நிற்பது வருத்தத்திற்குரியதாக அவர்களுக்கு தோன்றும்.

**''ஹலாலும் ஹறாமும்''** கவனத்தில் கொள்ளதவர்களும் மக்களில் உண்டு. முஸ்லீம்கள் ஹலாலையும் ஹறாமையும் கவனித்துக் கொள்வதன் தேவையைக் குறித்து **''புகாரியில்** வந்துள்ள கதீசில் காணலாம். **''மிஸ்காத்திலும்''** அதைக் குறித்து தூதுவ அரசன் கூறியதாக வந்துள்ளது.

நுபி (ஸல்) கூறினார்கள்.

**''இஸ்லாமில் கடமையாக்கப்பட்ட விஷயங்களை கடைப்பிடிப்பதோடு, ஒவ்வொரு முஸ்லீமும் அனுமதிக்கப்பட்ட உணவுகளை மட்டுமே புசித்திட வேண்டும்''**

ஹறாமான உணவு வகைகள் கலராமல் ஹலாலான உணவு வகைகள் மட்டும் ஒரு நபர் 40 நாள்கள் தொடர்ந்து புசித்துக் கொண்டால் எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது உள்ளத்தில் ஒளியினை நிறைத்து விடுவான். அவனது புத்தியின் சத்தியினை அதிகரிப்பான். அவனது இதயத்தில் நன்மையின் ஊற்றினை உருவாக்குவான், என்று நபி கரிம் (ஸல்) அவர்கள் நம்மை கற்ப்பித்திருந்தார். எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது திருமறை மூலமாக இவ்விஷயத்தை நமக்கு எடுத்துரைத்துள்ளதேயாகும். திரு குர் ஆன் வழியாக அல்லாஹ் கூறுகின்றான்.

**''மனிதர்களே! பூமியிலுள்ள பொருட்களில் அனுமதிக்கப்பட்டவற்றையும் பரிசுத்தமானவற்றையும் உண்ணுங்கள். ஷைத்தானின் அடிச்சுவடுகளை பின்பாற்றாதீர்கள் நிச்சயமாகவே அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவனாவான். நிச்சயமாகவே இவன் தீயவற்றையும், மானக் கோடானவற்றையும் செய்யும் படியும் அல்லாஹ்வைப் பற்றி நீங்கள் அறியாததைக் கூறும்படியும் உங்களை ஏவுகின்றான்'' (2-169,170)**

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலீ) அவர்கள் ரிப் போர்ட் செய்கின்றார். அன்னார், மேற்கூறிய குர் ஆன் வசனத்தை தூய தூதர் (ஸல்) வின் முன்பாக ஓதினார். அப்போது ஹஸ்ரத் ஷாஅத்பினு அபீவகாஸ் (ரலீ) எழும்பி நின்று கூறினார். அல்லாஹ்வின் தூதரே ''நான் செய்கின்ற அனைத்து பிரார்த்தனைகளையும் ஏற்றுக் கொள்ளும்படி தாங்கள் அல்லாஹ்விடம் துஆ செய்வீராக. அப்போது தூதர் (ஸல்) இவ்வாறு கூறினார். ''ஏய் ஷஅதே ஹலாலான உணவை மட்டும் உண்ணுங்கள். அவ்வாறேயானால் உனது பிரார்த்தனைகளை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளுவான். எவரின் கரங்களின்பால் எனது உயிர் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக எவராவது ஒரு பிடி ஹறாமான பொருட்கள் உண்ணினால் அல்லாஹ் 40 நாள்கள் அவனது பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்வதில்லை.

தூதுவ அரசன் தொடர்ந்து கூறினார். ஏராளமான ஆள்கள் உண்டு. அவர்கள் தங்களின் உணவு வகைகளும் ஆடை வகைகளும் ஹறாமான வழியில் பெற்றுக் கொண்டதேயாகும். அப்படியிருந்தும் அவர்கள் பிரார்த்தனை செய்வதற்காக கைகள் உயர்த்திக் கொள்கின்றார்கள். எப்படி அவர்களின் பிரார்த்தனைகளை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளுவான். அதைபோன்றே பொருள் உதவி செய்பவர்களும் உண்டு. அவர்கள் சதக்காவும் ''நன்கொடைகளும் வழங்கி கொள்வது அவர்கள் ஹறாமாக சோர்த்த பணத்தில் இருந்தேயாகும். இச்செயல் ஒருவர் அழுக்கான உடைகளை மூத்திரத்தில் துவைகின்றபோலவேயாகும். அது மூலமாக அவ்வுடைகள் மேலும் அதிகமாக அசுத்தமாகிவிடுகின்றது. ஹலாலான வழி மூலமாக பொருள்கள் சம்பாதித்துக் கொள்வதையே அல்லாஹ் விரும்புகின்றான். ஹஸ்ரத் ஹீசைபா (ரலீ) அவர்கள் இறுதி நாளின் அடையாளங்களில் ஒன்றினை இவ்வாறு ரிப்போர்ட் செய்துள்ளார். தூய தூதர் (ஸல்) கூறினார். **''உங்களின் ''இமாமை'' கொலைசெய்யும் வரையில் இறுதி நாள் வருவதில்லை. அதைபோன்றே ஒன்றுக்கொன்று ஆயுதம் எடுத்து போர் செய்யும் வரையில் இறுதிநாள் வருவதில்லை'' (தீர்மதி)**

மேல் கூறிய கதீஸின் அடிப்படையில், இறுதி நாள் அடையாளம் நேர்மையான கலீ.்.பக்களின் காலத்தில் வெளிப்பட்டது. இஸ்லாமின் வரலாறு இதற்கு முதலாவதாக சாட்சியாக இருந்துந்தது எப்போது என்றால், இஜிப்ட் முஸ்லீம்கள் உண்மை நம்பிகையாளர்களின் தலைவரான ஹ்ஸ்ரத் உஸ்மான்(ரலீ)வை ஹிஜ்ரா 35-ல் கொலை செய்யப்பட்ட போதாகும். பிறகு ஹிஜிரா 61 முஹறம் 10- நாள் சிறுபான்மை முஸ்லீம்கள் கார்பாலா வில் வைத்து ஹஸ்ரத் இமாம் கூசைன் (ரலீ)வை கொலை செய்தார்கள்.

அபு ஹீறைரா (ரலீ) அவர்கள் ரிப்போர்ட் செய்கின்றார். தூதுவ மன்னன்(ஸல்) கூறினார். **''ஏவரின் கரங்களின் பால் எனது ஜீவன் நிலை நிற்கின்றதோ அவன் மீது ஆணையாக, ஒருவர் ஒரு கபரின் அருகாய்மை வழியாக கடந்து செல்வதும். அதன் மேல் உருண்டு கொள்ளவும் நான் இதற்கு உள் இருந்திருப்பின் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று ஆசைப்படவும் செய்கின்ற காலம் வரையில் உலகம் முடிவடைவதில்லை'' (முஸ்லீம்)**

அபுகூறைரா (ரலீ) அவர்கள் ரிப்போர்ட் செய்கின்றார். ஹஸரத் முஹமது (ஸல்) அவர்கள் கூறினார். பொருளதரா ஆதிக்கியம் உருவாகும் வரையில் ''கியாமத்'' நிகழுவதில்லை. அந்த கால கட்டத்தில் ஏராளமான செல்வங்கள் உண்டாகிவிடும். அன்று சக்காத்து கொடுப்பதற்கு விருப்பினாலும் அதை எற்றுக் கொள்வதற்கு எவரும் தயாராக மாட்டார்கள். (முஸ்லீம், மிஸ்காத்)

உங்களிடம் செல்வங்கள் அதிகாரித்துவிடும் வரையில் இறுதி நாள் வருவதில்லை. பணமுடையவர்கள் அன்று கவலையுடையவர்களாக இருப்பார்கள் காரணம் அவர்கள் கூறுவார்கள் எங்களின் ''சதக்காகள்'' ஏற்றுக் கொள்ளுவதற்கு எவைரையாவது கிடைத்து விடாதா'' (புகாரி முஸ்லீம்)

தொடர்ந்து தூய தூதர் (ஸல்) அவர்கள் இறுதி நாளின் ஆறு அடயாகங்கள் கூறினார்கள். இதில் ஒன்று **''அன்று அதிமான அளவில் பணம் காணப்படும். ஒருவர் 100 தினார் மற்ற நபருக்கு வழங்கும் போது அவன் ரோஷத்துடன் கூறுவான் எனக்கு இது போதுமானது அல்ல. (புகாரி)**

நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் சதக்கா கொடுக்க விரும்பும் போது நீங்கள் அனுபவித்து விடுகின்ற வருத்தங்கள். அந்த நிச்சய சமயம். தோன்றி விட்டால், முகங்கள் வர்ண மற்றவையாகும். பூமி கீழ் மேல் மறிந்து விடும் . கால் மழை பொழியிம். முஹமது (ஸல்) உம்மத்தை சார்ந்தவர்கள் மது அருந்துகின்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் இசை ஞானிகளின் இசையில் ஆர்வமுடையவர்களாக மாறுவர்கள். குறிப்பாக பெண் இசை ஞானிகளின் சங்கீதத்தில். அப்படி அவர்கள் அனைத்தும் இழந்தவர்களாக மாறுவர்கள் இந்த உம்மத்தில் இவையனைத்தும் நிகழும். ஏராளமான மக்கள் இந்த தீமைகளில் உட்படுவர்கள். இந்த தீமைகளுக்கு எதிராக உண்மையில் எவ்வித தீர்வும் காணமுடியாது.

இறுதி நாளின் குற்ற குறவுகளின் இருந்து அல்லாஹ் நம்மை இரட்சிப்பானாக! அவனிடம் வைத்துள்ள அன்பு, நம்மை மகிழ்ச்சி உடையதாகட்டும். உள்ளத்தில் அல்லாஹ்வை அச்சிக் கொண்டு ஒவ்வொரு செயலும் செய்வதற்கு அவன் நமக்கு அருள் புரிவானாக. ஆமீன்


**Issued by**

**Jamaat Ul Sahih Al Islam**

*Dawa Department*

Tamil Nadu (Regd. No: A/693)

Web: www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by**

**Azim Ahmad**

*Sadr Sahibul Faraj*

Kerala/ Tamil Nadu

Cell: 9947181650

9789180817